ISSN:2582-9599

பிரணவ் தமிழியல் ஆய்விதழ்

# காரைக்கால் அம்மையாரின் சைவ சித்தாந்த கருத்துகள்

5

முனைவர் நா. தனலட்சுமி
உதவிப் பேராசிரியர், தமிழ்த்துறை
ஸ்ரீமதி தேவ் குன்வர் நானாலால் பட் மகளிர் வைணவக் கல்லூரி
குரோம்பேட்டை, சென்னை
dhanasathiya2729@gmail.com

**ஆய்வுச் சுருக்கம்**

இசைத் தமிழால் இறைவனைப் பற்றி முதன்முதலாக பாடியவர். தமிழுக்கு அந்தாதி எனும் இலக்கண முறையை அறிமுகம் செய்தவர் காரைக்கால் அம்மையார். அற்புதத் திருவந்தாதி, திருவாலங்காட்டு மூத்த திருப்பதிகம், திரு இரட்டை மணிமாலை போன்ற நூல்களைத் தந்து சைவ தமிழுக்கு பெரும் தொண்டாற்றியவர். அற்புதத் திருவந்தாதி, திருப்பதிகங்கள் ஆகியவற்றுள் உள்ள இறுதிப் பாடல் பதிகப் பலனை கூறுகின்றன. இவ்வமைப்பு முறை பின்வந்த திருஞானசம்பந்தர் தம் திருக்கடைக்காப்பை செய்வதற்கு முன்னோடியாக உள்ளது.

'கொங்கைத் திரங்கி' எனத் தொடங்கும் திருப்பதிகம் நட்டப்பாடை என்னும் பண்ணிலும் 'எட்டி இலவம்' என தொடங்கும் திருப்பதிகம் இந்தளம் என்னும் பண்ணிலும் அமைந்தன. திருஞானசம்பந்தர் அருளிய முதல் திருமுறையின் முதல் திருப்பதிகம் நட்டப்பாடை பண்ணிலும், இரண்டாவது திருமுறையின் முதல் திருப்பதிகம் இந்தளப் பண்ணிலும் அமைந்துள்ளன. சுந்தரர் அருளிய முதல் திருப்பதிகம் ஆகிய 'பித்தா பிறைசூடி' என்னும் பதிகம் இந்தள பண்ணிலும் அமைந்திருத்தலை ஒப்பு நோக்க முடிகிறது.

அம்மையாரை நோக்கி இறைவன் இங்கு நம்மிடம் வேண்டுவது யாது? என்று கேட்டார். அம்மையார் இறைவனிடம் உன்னிடம் என்றும் நீங்காத அன்பு வேண்டும். ஒரு கால் பிறப்பு உண்டேல் உன்னை என்றும் மறவாமல் வேண்டும். நீர் ஆடும் பொழுது உன் திருவடியின் கீழ் இருந்து மகிழ்வுடன் பாடிக் கொண்டிருக்க வேண்டும் என வேண்டினார்.

**தரவுச்சொற்கள்:** பதி, பசு, பாசம், வீடுபேறு, வினை, எண்குணத்தான்.

**முன்னுரை**

வாழ்க்கையின் விமர்சனமே இலக்கியம் என்றும் காலத்தின் கண்ணாடி இலக்கியம் என்றும் கூறுவர். கவிஞர்கள் படைக்கும் இலக்கியத்தில் காலத்தின் சாயலும், சமுதாய, வாழ்வியல் நிலைகளும் இடம்பெறுதல் இயல்பாகும். நாயன்மார்கள் சிவவழிபாட்டாலும் சைவ சமயம் சார்ந்த செயல்களாலும் சைவ மதம் தழைக்கச் செய்தனர், அவர்கள் பாடிய பாடல்கள் பன்னிரு திருமுறைகளாக வகுக்கப்பட்டுள்ளன. இத்திருமுறைகள் சிவபிரானின் பெருமையினையும், அவனை அடையும் நெறிகளையும் உணர்த்துகின்றன. எனவே, சைவசித்தாந்தக் கொள்கைகளை வகுக்க அவையே அடிப்படையாக அமைந்துள்ளன. அவ்வகையில் காரைக்கால் அம்மையார் பாடல்களில் காணலாகும் சைவ சித்தாந்தக் கருத்துகளைக் காணலாம்.

**திருத்தொண்டர் புராண சாரம்**

இந்நூலின் ஆசிரியரான உமாபதி சிவம் காரைக்கால் அம்மையாரின் வரலாறை விளக்க,

**"நன்கு புகழ் காரைக்கால் வணிகன்மிக்க தனதத்தன தரும் புனிதவதியார் மாவின் செங்கனிகள் திருவருளால் அழைப்பைக்கண்டு திகழ்**

**கணவன் அதிசயித்துத் தேசம் நீங்க**

**அங்க உடல் இழந்து முடிநடையால் ஏறி அம்மையே என**

**நாதன் அப்பா என்று**

**பொங்கு வடகயிலை பணிந்து ஆலங்காட்டில் புனிதன்நடம் அனவரதம்**

**போற்றினாரே" (திரு.பு.சா.28)**

எனப் போற்றுகின்றார். இப்பாடலில் அம்மையாரின் வரலாறு சுருக்கமாகக் காணப்படுகிறது. அம்மையாரின் பிறப்பு, மாங்கனி நிகழ்ச்சி, பெற்ற பேய்வடிவம், கயிலைக்குத் தலையால் நடந்தமை. இறைவனால் 'அம்மையே' என அழைக்கப் பெற்றமை, திருவாலங்காட்டில் பெற்ற பேறு ஆகிய செய்திகள் கூறப்பட்டுள்ளன.

**சைவ சித்தாந்தம்**

சைவ சித்தாந்தம் உணர்த்தும் முதன்மையான பொருள்கள் மூன்று. அவை பதி (இறைவன்), பசு (உயிர்), பாசம் (தளை அல்லது கட்டு) என்பனவாகும். இவற்றுள் அறிவிக்காமலேயே அறியும் பொருள் பதி; அறிவித்தால் அறியும் பொருள் பசு; அறிவித்தாலும் அறியாத பொருள் பாசம்.

இவை மூன்றும் ஒன்றிலிருந்து ஒன்று தோன்றுவன அல்ல; ஒவ்வொன்றும் அதன் அதன் அளவில் வியாபகமாகவே உள்ளது. காலத்தினாலும் இடத்தினாலும் கட்டுப்படாதவை. இவற்றிற்குத் தோற்றமும் இல்லை. அழிவும் இல்லை. இம்மூன்றும் என்றும் உள்ளவை என்கிறது சைவ சித்தாந்தம்.

**"பதி பசு பாசம் எனப்பகர் மூன்றில் பதியினைப் போல்பசு பாசம் அனாதி"**

**(திரு.ம.113)**

**"அறிவுஅறி வென்ற அறிவும் அனாதி**

**அறிவுக் கறிவாம் பதியும் அனாதி அறிவினைக் கட்டிய பாசம் அனாதி"**

**(திரு.ம.2378)**

எனும் திருமூலர் கூற்றாலும் அறியலாம்.

**பதி**

இம்முப்பொருள்களுள் பதியே உயர்ந்த உண்மைப் பொருளாகும். எல்லா உயிர்களுக்கும், அனைத்துப் பொருட்களுக்கும் தலைவனாக விளங்குவதால் இறைவன் 'பதி' எனக் குறிக்கப்படுகிறான். சைவ சித்தாந்தத்தில் சிவபிரான் அரன் என்னும், சிவன் என்றும், ஈசன் என்றும் குறிக்கப்படுகிறான். உயிர்களின் கட்டுகளை நீக்குபவன் என்பதாலும் உலகம் அவனிடம் ஒடுங்குகிறது என்ற பொருளாலும் அவன் 'அரன்' ஆவான். பேரின்பமாக விளங்குவதால் 'சிவன்' எனப் பெயர் பெறுகிறான். அனைத்திலும் கலந்து இருப்பதால் 'இறைவன்' என்றும் எல்லா ஐசுவரியங்களையும் உடையவன் என்பதால் 'ஈசன்' என்றும் போற்றப்படுகிறான். இப்பெருமானைப் பற்றிய அறிய செய்திகள் பலவற்றை அம்மையார் பாடல்களில் காணலாம்.

ISSN:2582-9599



**இறைவன் முழுமுதற் கடவுள்**

இறைவன் மேலானவன் என்னும் பொருள்பட, அம்மையார் இறைவனை ஈசன் என்றும், பிரான் என்னும், அரன் என்றும் குறிப்பதைக் காணலாம்.

**'ஈசன்' (அ.தி.10, 23, 53; தி.இ.ம.மா. 2, 3)**

**' பிரான்' (அ.தி. 10, 22, 45, 61; தி.இ.ம. மா 3)**

**'அரன்' (அ.தி.17)**

எல்லோர்க்கும் முற்பட்டவன் என்பதால் 'முதற்கண்ணான்' (அ.தி. 32) என்றும், எல்லோரினும் பெரியவன் என்னும் கருத்தில் 'பெரியானை' (அ.தி.85) என்றும் தேவர்கட்கெல்லாம் தலைவனாதலின் 'வானோர்பிரான்' (அ.தி. 1, 44) என்றும் எல்லா உலகங்கட்கும் தலைவனாதலின் 'மூவேழ் உலகம் ஆள்பவன்' (அ.தி.19) என்றும் இறைவனைப் போற்றுகிறார். ஈசன் அவனலாது இல்லை' (தி.இ.ம.மா.2) எனச் சிவனைத்தவிரப் பிறதெய்வங்கள் இல்லை என அவனது மேம்பட்ட நிலையை உணர்த்துகிறார்.

**"சிவனோடொக் குந்தெய்வம் தேடினு மில்லை அவனோடொப் பாரிங்**
**கியாவரும் இல்லை " (திரு.ம.5)**

என்று திருமூலர் கூறுவதையும் காண முடிகிறது.

**இறைவன் நிகரற்றவன்**

சிவபிரானுக்கு நிகர் எவரும் இல்லை என்பது சித்தாந்தக் கருத்தாகும். அம்மையாரும் சிவபிரானை 'ஒப்பினை இல்லவன்' (தி.மூ.தி.1.11) 'நிகர் ஏதுமின்றித் தழல் கொண்ட சோதி செம்மேனி எம்மான்' (தி.இ.ம.மா.11) எனக் குறிப்பிடுகிறார்.

**இறைவன் ஞான வடிவினன்**

வேதங்களை உணர்ந்தவனும் வேதப் பொருளாக இருப்பவனும், வேதங்கள் தோன்றக் காரணனும் சிவபிரான் என்பதால், அம்மையார் இறைவனை, வேதியனை வேதப் பொருளானை வேதத்துக்கு ஆதியனை" (திரு.இ.ம.மா.8) என்கிறார். அவன் ஞானத் தலைவனாய் விளங்குவதால் 'ஞானத்தான்' (அ.தி.6), 'ஞானமயனாகி நின்றானும்' (அ.தி.21) என வியக்கிறார்.

**இறைவன் திருமேனி**

உயிர்கள் மெய்யுணர்வு பெற்று இறக்கும் பொருட்டு இறைவள் உருவம் கொண்டு நிற்பான். அவ்வுருவம் அருவத்திருமேனி, அரு உருவத்திருமேனி, உருவத்திருமேனி என மூன்று வகையில் அமையும். இறைவன் உயிர்கள் மீது காட்டும் அருளாலே, தன்னை மனிதர்களுக்குக் குறிப்பிட்ட உருவில் வெளிப்படுத்திக் கொள்கிறான். இறைவனின் உருவ நிலைகளைப் பலவகையாகச் சைவ சித்தாந்திகள் குறிப்பிடுகின்றனர். இறை அருளால் இறைவனை அறிய முடியும்.

காரைக்கால் அம்மையார் கண்ட இறைவனின் உருவத் திருமேனியைக் காண்போம். ‘சிவபிரான் சிவந்த மேனியன்' (அ.தி. 4.4) மின்னலைப் போல் ஒளிமிகுந்த சடையினன் (அ.தி. 15,37). அவன் ஆடுகையில் சடைமுடி தாழும் (தி.மூ.தி. 10), கங்கையொடு திங்களைத் திருமுடியில் சூடியவன் (அ.தி.11) கொன்றை மலர்களும் வன்னிமாலையும் தலையினை அழகுசெய்வன (அ.தி.7) வெண்ணீறு பூசிய மேனியன் (அ.தி.7). அவனது கண்டம் மேகமெனக் கறுத்திருக்கும் (அ.தி. 23, 89). நீலமணி

மிடற்றனாய் விளங்கினான் (அ.தி. 33), பகையாகிய பிறையும், அரவும், புனலும் அனலும் சூடும் இறைவன் (அ.இ.தி.147), பாம்பை அணியாக அணிபவன் (அ.தி. 14).

மேற்கூறிய இறைவன் திருமேனியை வர்ணிக்கும் அம்மையார் இறைவனிடம் பல பாடல்களில் பாம்பை அணிகலனாகக் கொள்ளாதே எனத் தாயன்போடு இறைஞ்சுவதையும் காண்கிறோம்.

இறைவன் அடியார் விரும்பும் உருவத்திலும் காட்சியளிக்கக் கூடியவன், அதனால் அம்மையார் 'சிவபிரான் எவ்வுருவினர் என மயங்குதல் வேண்டாம். அவரை எந்தக் கோலத்தில் எந்த உருவத்தில் காண விரும்புகின்றனரோ அந்தந்தக் கோலத்தில் அந்தந்த வடிவில் காட்சி தந்து அருள் செய்வான்' என்பதையும் உணர்த்துகிறார்.

**'எக்கோலத்து எவ்வுருவாம் எத்தவங்கள் செய்வார்க்கும் அக்கோலத்து**
**அவ்வுருவே யாம்"(அ.தி.33)**

என்ற அடிகளால் இதனை அறியலாம். இக்கருத்தை,

**“ஆரொருவர் உள்குவார் உள்ளத்துள்ளே அவ்வுருவாய் நிற்கின்ற அருள்"**
**(தேவாரம்)**
**“யாதொரு தெய்வங் கொண்டீர் அத்தெய்வம் ஆங்கே**
**மாதொரு பாகனார்தாம் வருவர்" (சிவஞான சித்தியார்)**

என்னும் பாடலடிகள் வலியுறுத்துவதை காண முடிகிறது.

**இறைவன் எண்குணத்தான்**

சைவசித்தாந்தம் இறைவன் எண் குணங்களை உடையவன் என்று கூறும்.

**கோளில் பொறியின் குணமிலவே எண்குணத்தான்**
**தாளை வணங்காத் தலை (குறள்.9)**

கொள்கை இல்லாத ஐந்து பொறிகள் இருந்தும் அவற்றால் ஒரு பயனுமில்லை. அதுப்போல எல்லோரும் விரும்பக்கூடிய நற்குணங்களை கொண்ட இறைவனின் தாள் (திருவடிகள்)கண் பணியாத/வணங்காத தலை இருந்தும் ஒரு பயனுமில்லை.

திருநாவுக்கரசரின் “தலையே நீ வணங்காய்” என்கிற பாடலில்

**“தலையே நீ வணங்காய்,**
**கண்காள் காண்மின்களோ,**
**செவிகாள் கேண்மின்களோ,**
**மூக்கே நீ முரலாய்,**
**வாயே வாழ்த்து கண்டாய்,**
**நெஞ்சே நீ நினையாய்,**
**கைகாள் கூப்பித்தொழீர்,**
**ஆக்கையாற்பயனென்,**
**கால்களாற் பயனென்”**

ஒவ்வொரு பயனுடை புற காரணங்களையும் விளித்து அவைகளுக்குண்டான இறைப்பொருளைச் சார்ந்த

கடைமைகளைக் கூறுகிறார்.

சைவசித்தாந்தம் இறைவன் எண் குணங்களை உடையவன் என்று கூறும், அவ்வியல்புகளாவன : தன் வயத்தனாதல், தூய உடம்பினன் ஆதல், இயற்கை உணர்வினன் ஆதல், முற்று முணர்தல், இயல்பாகவே தளைகளற்று இருத்தல், பேரருளுடைமை, முடிவிலாற்றுலுடைமை, வரம்பில் இன்பமுடைமை. அம்மையார் பாடல்களில் அக்குணங்கள் உணர்த்தப்படுகின்றன. 'மெய்ப் பொருளும் தானே' (அ.தி.20) என்னும் தொடர் 'தன்வயத்தனாதல்' பண்பையும், மின்னும் சுடர்வரு' (அ.தி. 24) 'மூவா' நுதற்கண்ணான்' என்பன தூய உடம்பினனாதல் பண்பையும் 'அறிவான்' (அ.தி.20) அறிவினையே பற்றினால்' (அ.தி.87) என்பன முற்றுமுணர்தல், இயற்கை உணர்வினனாதல் பண்புகளையும் உணர்த்துவன. 'என்றும் தீர்ப்பது இடர்' (அ.தி.1) 'வெந்துயரம் வந்தால் அது மாற்றுவான்' (அ.தி.5) என்னும் தொடர்கள் அவனது பேரருளைக் காட்டுவன. 'வல்லாளன்' (திரு. இ.ம.மா.4) என்றது இறைவனது ஆற்றலை உணர்த்தும். இடுகாட்டில் அவன் ஆடும் நடும் செயல் அவனது தளைகளற்ற நிலையினையும் வரம்பில் இன்ப நிலையினையும் காட்டி நிற்கும். 'எட்டுக்கொலாம் அவர் ஈறில் பெருங்குணம்' என்பர் நாவுக்கரசர். இறைவனை எண்குணத்தினன் எனக் கூறினாலும் அவன் அனைத்து நற்பண்புகளுக்கும் இருப்பிடமானவன். அவன் குணங்களுக்கு எல்லை இல்லை.

**“பண்ணவன் எண்குணன்” (சிலப் 10:188)**

**“எட்டுக் கொலாமவர் ஈறில் பெருங்குணம்” (அப்பர்.விடந்தீர்த்த 8)**

**“குணங்கள்தோள் எட்டு மூர்த்தி” (அப்பர்.வன்னியூர் 7)**

**“கலைஞானிகள் காதல்எண் குணவன்காண்” (அப்பர்.தென்குரங்கு 4)**

**“எட்டு வான்குணத் தீசனெம்மான்” (அப்பர்.இடைமருது 4)**

**“இறையவனை மறையவனை எண்குணத்தினானை” (சுந்தரர்.கானாட்டு.3)**

**“எண்குணத் தீசனை” (பொன்வண்ணத் 53)**

**“எண்குணனும் கோட்பட்டு” (சீவக 1469)**

**“தாளினான் கானப்பேர் தலையினால் வணங்குவார்” (சம்பந்தர்.கானப்பேர் 8)**

**“தலையினால் வணங்கத்தவ மாகுமே” (சம்பந்தர்.மழபாடி 4)**

**“தலையே நீவணங்காய்” (அப்பர்.அங்க.1)**

**“வணங்கத் தலைவைத்து” (திருவா.281)**

என்றும் இறைவன் எண்குணத்தான் அவற்றில் தலை முதன்மையானவை என்று மற்ற நூல்கள் குறிப்பிடுகின்றன.

**அறிவிப்பானும் அறிகின்றானும்**

இறைவனது அறிவு அறிவிக்கின்ற அறிவு, உயிர்களின் அறிவு அறியும் அறிவு. உயிரின் அறிவு சிற்றறிவாகும். எனவே உயிர்க்கு இரண்டு உபகாரங்களை இறைவன் செய்கிறான். கண் காணும் இயல்பைப் பெற்றிருப்பினும் ஒளியின் உதவியின்றிக் கண் காண இயலாது. அவ்வாறே உயிரும் இறைவன் உதவியின்றி எதையும் அறியமுடியாது. கண் ஒரு பொருளைக் காண வேண்டுமாயின் கதிரவன் ஒளியோ அல்லது வேறு ஒளியோ அப்பொருளை விளக்கிக் காட்டல் வேண்டும். அதுபோல

இறைவன் உயிர் அறிவை விளக்கி அறியச் செய்கிறான். அது, காட்டும் உபகாரம் ஆகும். சூரிய ஒளியோ பிற ஒளியோ விளக்கிக் காட்டினால் மட்டும் போதாது. கண் அப்பொருளைக் காணும்போது உயிர் அறிவும் வேறு சிந்தனையின்றி உடனிருந்து காண வேண்டும். அதுபோல இறைவன் உயிர் அறிவை விளக்கிக் காட்டினால் மட்டும் போதாது. உயிர் ஒன்றினை அறியும்போது தானும் உடன்நின்று அறிகின்றான், இதனைக் காணும் உபகாரம் என்பர். எல்லாவற்றையும் அறிந்தவனாம் இறைவன் உயிர்களுக்கு அறிவைக் காட்டுபவனாகவும் உடனிருந்து காண்பவனாகவும் விளங்குகிறான். இறைவன் காட்டும் இந்த இரு உபகாரங்களை அம்மையார் பாடலில் காணலாம்.

பண்பையும், மின்னும் சுடர்வரு' (அ.தி. 24) 'மூவா' நுதற்கண்ணாள்' என்பன தூய உடம்பினனாதல் பண்பையும் 'அறிலான்' (அ.தி.20) அறிவினையே பற்றினால்' (அ.தி.87) என்பன முற்றுமுணர்தல், இயற்கை உணர்வினனாதல் பண்புகளையும் உணர்த்துவன. 'என்றும் தீர்ப்பது இடர்' (அ.தி.1) 'வெந்துயரம் வந்தால் அது மாற்றுவான்' (அ.தி.5) என்னும் தொடர்கள் அவனது பேரருளைக் காட்டுவன. 'வல்லாளன்' (திரு. இ.ம.மா.4) என்றது இறைவனது ஆற்றலை உணர்த்தும். இடுகாட்டில் அவன் ஆடும் நடும் செயல் அவனது தளைகளற்ற நிலையினையும் வரம்பில் இன்ப நிலையினையும் காட்டி நிற்கும். 'எட்டுக்கொலாம் அவர் ஈறில் பெருங்குணம்' என்பர் நாவுக்கரசர். இறைவனை எண்குணத்தினன் எனக் கூறினாலும் அவன் அனைத்து நற்பண்புகளுக்கும் இருப்பிடமானவன். அவன் குணங்களுக்கு எல்லை இல்லை.

**அறிவிப்பானும் அறிகின்றானும்**

இறைவனது அறிவு அறிவிக்கின்ற அறிவு, உயிர்களின் அறிவு அறியும் அறிவு. உயிரின் அறிவு சிற்றறிவாகும். எனவே உயிர்க்கு இரண்டு உபகாரங்களை இறைவன் செய்கிறான். கண் காணும் இயல்பைப் பெற்றிருப்பினும் ஒளியின் உதவியின்றிக் கண் காண இயலாது. அவ்வாறே உயிரும் இறைவன் உதவியின்றி எதையும் அறியமுடியாது. கண் ஒரு பொருளைக் காண வேண்டுமாயின் கதிரவன் ஒளியோ அல்லது வேறு ஒளியோ அப்பொருளை விளக்கிக் காட்டல் வேண்டும். அதுபோல இறைவன் உயிர் அறிவை விளக்கி அறியச் செய்கிறான். அது, காட்டும் உபகாரம் ஆகும். சூரிய ஒளியோ பிற ஒளியோ விளக்கிக் காட்டினால் மட்டும் போதாது. கண் அப்பொருளைக் காணும்போது உயிர் அறிவும் வேறு சிந்தனை யின்றி உடனிருந்து காண வேண்டும். அதுபோல இறைவன் உயிர் அறிவை விளக்கிக் காட்டினால் மட்டும் போதாது. உயிர் ஒன்றினை அறியும்போது தானும் உடன்நின்று அறிகின்றான், இதனைக் காணும் உபகாரம் என்பர்.) எல்லாவற்றையும் அறிந்தவனாம் இறைவன் உயிர்களுக்கு அறிவைக் காட்டுபவனாகவும் உடனிருந்து காண்பலனாகவும் விளங்குகிறான். இறைவன் காட்டும் இந்த இரு உபகாரங்களை அம்மையார் பாடலில் காணலாம்.

**அறிவானும் தானே அறிவிப்பான் தானே அறிவாய் அறிகின்றான்**

**தானே - அறிகின்ற மெய்ப்பொருளும் தானே." (அ.தி.20)**

இப்பாடலில் ‘அறிவிப்பான்' என்பது உயிர்கட்குக் காட்டுபவன் என்பதால், அஃது இறைவன் செய்யும் காட்டும் உபகாரத்தைக் குறிக்கும். அறிவாய் அறிகின்றான் என்றது அறிவினுள்ளே அத்துவிதமாகக் கலந்து நின்று உயிர்கள் அறியும்படி தானும் அறிபவன் எனப் பொருள்படுவதால், அஃது உயிர்கள் அறியும்போது தானும் உடன்நின்று அறிகின்ற 'காணும் உபகாரத்தைக் குறிக்கும்.

**பசு**

இறைவனுக்கு அடுத்தநிலையில் உயர்வாகக் கருதப்படுவது உயிர். இதனை ஆன்மா எனவும் கூறலாம். உயிர் அழிவில்லாதது. அஃது அறிவு, விருப்பம், வல்லமை ஆகியவற்றை உடையது. இயல்பிலே தளை உடையதும் வினைவழி உடல் எடுப்பதும் உயிராகும். செம்பைக் களிம்பு பற்றியிருப்பது போல ஆணவமலம் தொன்று தொட்டே ஆன்மாவைப் பற்றி நிற்கிறது. இதை உணர்த்தவே சைவ சித்தாந்திகள் ஆன்மாவைப் 'பசு' எனக் குறிப்பிட்டனர். பசு என்றால் கட்டுண்டது, தளையுண்டது என்பது பொருளாகும்.

**உயிர்களின் எழுவகைப் பிறப்பு**

**புல்லாகிப் பூடாய்ப் புழுவாய் மரமாகிப்**
**பல்விருக மாகிப் பறவையாய்ப் பாம்பாகிக்**
**கல்லாய் மனிதராய்ப் பேயாய்க் கணங்களாய்**
**வல்லசுர ராகி முனிவராய்த் தேவராய்ச்**
**செல்லாஅ நின்றஇத் தாவர சங்கமத்துள்**
**எல்லாப் பிறப்பும் பிறந்திளைத்தேன் எம்பெருமான் (திருவா.26-31)**

எல்லா உயிர்ப்பொருள்களையும் தாவரப் பொருள் (அசையாப்பொருள்), சங்கமப்பொருள் (அசையும் பொருள்) என்ற இரு பகுதிகளாகப் பிரிக்கலாம். தாவர வகையுள் கல், புல், பூடு, மரம் என்னும் நான்கும், சங்கம வகையுள் புழு, பாம்பு, பறவை, பல்விருகம், மனிதர், அசுரர், முனிவர், பேய், கணங்கள், தேவர் என்னும் பத்தும் அடங்கும். கல்லுக்கும் உயிர் உண்டு என்பதை இக்காலத்தாரும் உடன்படுவர். 'மிருகம்' என்பது 'விருகம்' என மருவியது. உயிர், தாவரப் பொருளாயிருந்து அறிவு வளர்ச்சிக்கேற்பச் சங்கமப் பொருள்களில் தேவர் ஈறாக உயர்ந்து பிறவி எடுக்கிறது. பொதுவாக எழுவகைப் பிறப்புக்களைக் கூறுவர். தாவரம், நீர்வாழ்வன, ஊர்வன, விலங்கு, பறப்பன, மனிதர், தேவர் எனக்கூறப்படும் எழுவகைப் பிறப்புக்களை அம்மையார்,

**"அவர்க்கே எழுபிறப்பும் ஆளாவோம்" (அ.தி.3)**

என்ற அடிகளில் உணர்த்துகிறார்.

**உயிர்களின் இருவகை நிலை**

உயிர்கள் உலகியல் நெறியில் உழலும் நிலையைக் கட்டுண்ட நிலை அல்லது பெத்தநிலை என்றும் சிவநெறியில் செல்லும் நிலையை 'முத்திநிலை' என்றும் உயிரின் இருநிலைகளைக் குறிப்பிடுவர். பெத்தநிலையில் உயிர்களுக்கு இறைவனைக் காணும் இயல்பு இல்லை. இதனை,

**'அன்றும் திருவுருவம் காணாதே ஆட்பட்டேன்**
**இன்றும் திருவுருவம் காண்கிலேன்" (அ.தி.61)**

எனும் அம்மையாரின் பாடல் அடிகளால் அறியலாம்.

இப்பாடலில் 'அன்று' என்றது அம்மையார் அருள் விளக்கம் பெறாது உலக இயலில் நின்ற நிலையைக் குறிக்கும். 'இன்று' என்பது இறை அருள்பெற்றுச் சிவபூதகணங்களுள் ஒன்றாகி உலகைவிட்டுத் திருக்கயிலையை அடையச் செல்லும் நிலையைக் குறிக்கும்.

**பாசம்**

ஆன்மாவின் கட்டுண்ட நிலையே பாசமாகும். எதனால் கட்டுண்டது என்றால் ஆன்மா கட்டுண்டது பாசத்தால் என்பர் சைவ சித்தாந்திகள். உயிர்கள் இறைவனை அறியாவண்ணம் தடுப்பது

பாசமாகும். பாசத்தின் வகைகளாக ஆணவம், கர்மம், மாயை என்பன கூறப்படும். உயிர்கள் அறிவுடையனவாய், அழிவில்லாதனவாய் இருப்பினும் பாசத்தின் சேர்க்கையால் அவை இறுதியுடையனவாய், எல்லைக்குட்பட்டனவாய், சிற்றறிவு உடையனவாய்ச் செயல்படுகின்றன. ஆணவம் உயிருடன் தொன்று தொட்டு உடனிருந்து மயக்குவதால் அதனை இருள்மலம், மூலமலம் என்று குறிப்பிடுவர். உயிர், விருப்பு வெறுப்புகளால் தூண்டப்பட்டு வினை செய்கிறது. பாவ புண்ணியங்களைச் சேர்க்கிறது. பிறவி எடுத்த உயிர் தான் செய்த வினையின் பயனை அனுபவிக்க வேண்டும். வினைப்பயனே 'கர்மம்' எனக் கூறப்படுவது. மூன்றாவதாகிய மாயை மனிதனைப் பதியிடமிருந்து பிரித்துச் சிற்றின்பங்களுக்கு வழிவகுக்கிறது. ஆணவம், கர்மம், மாயை ஆகிய மூன்றும் உயிரினைப் பற்றியிருப்பது, அரிசியை உமி, முளை, தவிடு போன்றவை பற்றியிருப்பது போன்றது என்பர்.

ஆணவமலம் மிக்கெழுந்து வினைகளைச் செய்ய அது காரணமாக உயிர்கள் பிறவித் துன்பத்தை அடைகின்றன என்பது அம்மையார் ‘கிளர்ந்து வெந்துயர் வந்திடும்' (திரு.இ.ம.மா.1) என்ற பாடலடிகளால் உணர்த்துகிறார்.

**வினை**

சைவ சிந்தாந்திகள் வினையை மூன்று கூறுகளாகப் பிரிப்பர். அவை சஞ்சிதம், பிராரத்தம், ஆகாமியம் என்பன. பல பிறவிகளில் செய்து பயன் அனுபவிக்கப்படாது சேர்ந்திருக்கும் வினைத் தொகுதிக்குச் 'சஞ்சிதம்' என்று பெயர். அத்தொகுதியிலிருந்து இப்பிறப்பில் அனுபவிப்பதற்கென எடுக்கப்படும் ஒரு குறிப்பிட்ட 'ஆகாமியம்' பகுதிக்குப் பிராரத்தம் என்பது பெயர். இப் பிராரத்தத்தை அனுபவிக்கும்போது புதிதாக ஈட்டும் வினை எனப்படும். இவற்றை முறையே பழவினை, நிகழ்வினை, எதிர்வினை என்றும் குறிப்பிடுவார். வினை பற்றி அம்மையார் கூறும் கருத்துக்களைக் காணலாம். பல்வேறு அடைமொழிகளால் வினையின் இயல்பை அம்மையார் விளக்குகிறார்.

'வல்வினை' - (அ.தி.34), மேலை இருவினை' - (அ.தி.81), தொல்வினை - (திரு.இ.ம.மா. 11, 12),'எறிவினை' - (அ.தி.87), 'வினைக்கடல்' – (அ.தி. 16), இடர் - (அ.தி. 1, 16) ஓர் உயிர் செய்த வினையின் பயன் அவ்வுயிரே அனுபவிக்க வேண்டும். ஒருவர் செய்த வினையின் பயனைப் பிறர் அனுபவிக்க முடியாது. எத்தனை பிறவிகள் எடுப்பினும் செய்த வினையின் பயனைச் செய்தவனே அனுபவிக்க வேண்டும். எனவே 'வினை' வலிமையுடையது எனும் பொருளில் 'வல்வினை' எனக் குறிப்பிட்டுள்ளார்.

வினை நல்வினை, தீவினை என இருவகைப்படும். இரண்டின் பயனையும் அவன் மேன்மேலும் அனுபவிக்க வேண்டி இருப்பதால் 'மேலை இருவினை' என்கிறார் அம்மையார். இருவினைகளையும் ஒப்பாக எண்ணிப் பற்றற்று இருந்தால்தான் துன்பங்கள் நீங்கும். பழைமை வாய்ந்த வினைகளின் தொகுதியான 'சஞ்சிதத்தை' உணர்த்தத் 'தொல்வினை' என்கிறார். வினையானது பிறவிதோறும் துன்பத்தைத் தருவது, தாக்கக்கூடியது என்னும் பொருள்பட 'எறிவினை' என்கிறார். வினையைக் கடலாகவும் உருவகித்து 'வினைக்கடல்' என நயம்படக் கூறுகிறார். வினையின் பயன் கடல் அளவினது என்பதாலும், கடல் அலைபோல் ஓயாது வந்து பயன் விளைப்பன என்பதாலும் வினையைக் கடலாகப் பார்க்கிறார்.

வினையால் வரக்கூடியது துன்பம் ஆதலால் வினையால் வரும் பயனை 'இடர்'எனக் குறிப்பிட்டுள்ளார். இது சைவ சித்தாந்தத்தில் 'பிராரத்தம்' என்று கூறப்படும். வினை காரணமாகப் பல பிறவிகள் தொடர்ந்து வருவதால் பிறவித் துன்பத்தையும் 'மீளாப் பிறவிக்கடல்', (அ.தி.16) என்கிறார்.

**ஞானத்தின் படிநிலைகள்**

சைவ சித்தாந்தம் ஞானத்தின் படிநிலைகளாகக் கேட்டல், சிந்தித்தல், தெளிதல், நிட்டை கூடல் என்ற நான்கினைக் கூறும்.

**“கேட்டலுடன் சிந்தித்தல், தெளிதல், நிட்டை கிளத்தலென ஈரிண்டாம்**
**கிளக்கில் ஞானம்” (சித்தியார் சுப. 276)**

என்பது சிவஞான சித்தியார்.

**"ஒன்றே நினைத்திருந்தேன் ஒன்றே துணிந்தொழிந்தேன் ஒன்றே என்**
**உள்ளத்தின் உள்ளடைத்தேன் - ஒன்றேகாண்." (அ.தி.11)**

என்ற பாடலில் நினைந்திருத்தல், துணிதல், உள்ளத்துள் அடைத்தல் என மூன்று படிநிலைகளைக் காண்கிறோம். இவற்றுள் துணிதல் என்பது கேட்டல், சிந்தித்தலையும், துணிதல், தெளிதலையும் - உள்ளத்துள் படைத்த - நிட்டை கூடல் என்பதனையும் குறிக்கும் என்பர். நிட்டை கூடும் தன்மையை,

**“என் நெஞ்சத்தான் என்பன் யான்” (அ.தி.6)**
**“தனி நெஞ்சினுள் அடைத்து" (அ.தி. 96)**

என்ற வரிகளும் உணர்த்தும்.

**வீடுபேறு வேண்டாம்**

இறைவன், தம்முடைய பிறவித்துன்பத்தை நீக்காவிடினும், தம்மீது இரக்கம் காட்டாவிடினும், தாம் செல்ல வேண்டிய நெறியைக் காட்டாவிடினும், அவர்மீது செலுத்தும் அன்பு குறையாது என்கிறார்.

**"இடர்களை யாரேனும் எமக்கிரங்கா ரேனும்**
**படருநெறி பணியா ரேனும் - சுடர்உருவில்**
**என்பறாக் கோலத் தெரியாடும் எம்மானார்க்கு**
**அன்பறா தென்னெஞ் சவர்க்கு ' (அ.தி.2)**

இடர்களைதல் போன்ற பயன்கருதித் தாம் அன்பு செய்யவில்லை என்கையில் அன்பு செய்தலே அதற்குப் பயனாகிறது.

**"இறைவன் எமக்கு இரங்காரேனும் கறைமிடற்று**
**எந்தையார்க்கு ஆட்பட்டோம்" (அ.தி.23)**

என்று மற்றோரிடத்திலும் கூறுகிறார். அம்மையார் பிற அடியார்களையும் உளப்படுத்தியே இவ்வாறு பாடுகிறார்.

பரமே பார்க்கும் நிலையை சிவானுபவம் பெற்ற அடியார்கள் எங்கும் எதிலும் இறைவனையே காண்பர். அல்லும் பகலும் இடையறாது இறைவனையே நினைந்திருப்பதால் அவர்கள் பார்க்கும் இடமெங்கும் சிவனையே காண்பர். பார்க்கும் காட்சிகளும் சிவபிரானையே நினைக்கச் செய்யும்.

**"காலை போன்றிலங்கு மேனி கடும்பகலின்**
**வேலையே போன்றிலங்கு வெண்ணீறு - மாலையின் தாங்குருவே போலும் சடைக்கற்றை -**
**மாலையின் வீங்கிருளே போலும் மிடறு," (அ.தி.65)**

நாளின் பல கூறுகளாகவே இறைவனது திருமேனிப் பகுதிகளைக் கண்டு போற்றுகிறார். எல்லாப் பொழுதுகளையும் அதாவது முழுநாளையும் சிவனாகக் கண்டு திளைக்கும் தன்மையை அம்மையாரிடம் இங்குக் காண்கிறோம்.

**தொகுப்புரை**

இறைவன் அருளைப் பெற்று அம்மையார் வேத மெய்ப்பொருளாம் இறைவனிடம் விடை பெற்றுக்கொண்டு திருவாலங்காடு என்னும் தலத்தை தலையாலேயே நடந்து சென்றார். கோயிலுள் புகுந்து இறைவன் முன்பு நின்றார். எம்பெருமான் அண்டங்களில் பொருந்த திருவடியை தூக்கி ஆடிய ஊர்த்துவ தாண்டவக் கோலம் கண்டு மகிழ்ந்தார். திருஆலங்காட்டு பெருமானை கொங்கைத் திரங்கி என தொடங்கும் பாடலுடன் 11 பாடல்களால் வழிபட்டார். சிவபெருமானால் அம்மையே என மதுரமாக அழைக்கப்பட்டவர். அம்மையாரின் பாடல்கள் சைவ சித்தாந்தக் கருத்துகளின் பெட்டமாக விளங்குவதை அறிய முடிகிறது.

**துணைநூற் பட்டியல்**

1. ந. முருகேச பாண்டியன், காரைக்கால் அம்மையார் பாடல்கள், டிஸ்கவரி புக் பேலஸ், சென்னை. 2019.
2. இரா. நெடுஞ்செழியன், திருக்குறள், நன்செய் பிர சுரம், திருத்துறைப்பூண்டி,2022.
3. ஜி. வரதராஜன், திருமந்திரம் 1,2,3, பழனியப்பா பிரதர்ஸ், சென்னை, 2015.
4. பழ. முத்தப்பன், சைவ சித்தாந்த சாத்திரங்கள், உமா பதிப்பகம், சென்னை, 2017.
5. ச. தண்டபாணி தேசிகர், திருவாசகம், கௌரா பதிப்பகம், சென்னையில், 2017.